# செங்கோட்டை நகர்மன்றம்

## செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் 20–05–2022

### அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைமை : திருமதி.ஆர்.ராமலட்சுமி நகர்மன்றத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.சு.நவநீதிக் கிருஷ்ணன் நகர்மன்றத் துணைத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.ம.இளவரசன் பி.காம்., ஆணையாளர் அவர்கள்

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சி வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தையில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற உள்ளதால் பணிக்கு இடையூறாக உள்ள கீழ்காணும் மரங்களை முறித்து அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்களின் மூ.மு.(அ.5)/2657/2022, நாள்:16.05.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

**வாரச்சந்தை**

| | |
|---|---|
| புளியமரம் | 8 |
| வேம்பு மரம் | 1 |
| நாவல் மரம் | 1 |
| மொத்தம் | 10 **எண்ணங்கள்** |

**தினசரி சந்தை**

| | |
|---|---|
| புங்கை மரம் | 1 |
| அரச மரம் | 1 |
| வேம்பு மரம் | 3 |
| ஆலமரம் | 1 |
| **மொத்தம்** | 6 **எண்ணங்கள்** |

**அலுவலக குறிப்பு**

1) மேற்படி மரங்களை முறித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு
2) பணியின் அவசர அவசியம் கருதி மரங்களை முறித்து அப்புறப்படுத்த நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஏலம் கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 பெரியசாமி தெருவில் (முப்புடாதி அம்மன் கோவில் பின்புறம் அருகில்) குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தினால் அப்பகுதி மக்களுக்கு பிரதான சாலையில் உள்ள 4’’ பி.வி.சி குழாயிலிருந்து வீட்டுக்குடிநீர் இணைப்பு குழாய் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வினியோகம் சரியாக கிடைப்பதில்லை என அப்பகுதி மக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் குடிநீர் அவசியம் கருதி மேற்படி பகுதியில் புதிதாக 3 பி.வி.சி குடிநீர் பகிர்மான குழாய் பதிப்பதற்கு ரூ.55000/.ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி குடிநீர் நிதி ஆதாரத்தினை எதிர்நோக்கி எதிர்வரும் அரசு திட்டங்களின் நிதி மூலம் இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சி 1 முதல் 24 வரையுள்ள அனைத்து தெரு விளக்குகளையும் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளும் பணியினை செய்ய 2021-2022ம் ஆண்டிற்கு (01.06.2021 முதல் 31.5.2022 முடிய) Sri Ganga Electricals, Tirunelveli என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தர வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி உத்தரவு காலம் 31.5.2022ல் முடிவடைவதால் 1.6.2022 முதல் 31.5.2023 முடிய 2022- 2023ம் ஆண்டிற்கு ஒப்பந்த ஆவணம் பிரிவு 1 பகுதி 2 உட்பிரிவு II-7ல் கண்ட விதிகளின்படி ஒப்பந்தம் புதுப்பித்து மேற்கண்ட Sri Ganga Electricals, Tirunelveli என்ற நிறுவனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) ஒப்பந்த ஆவணம் பிரிவு (1) பகுதி 2, உட்பிரிவு II-7ன்படி 2022-2023ம் ஆண்டிற்கு ஒப்பந்தம் புதுப்பித்து Sri Ganga Electricals, Tirunelveli நிறுவனம் மூலம் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) 2022-2023ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு புதுப்பிக்கப்படுவதனால் ஏற்படும் 5% கூடுதல் செலவினம் ரூ.12,79,625/-ஐ வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு ஏற்ப அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 04 :**

செங்கோட்டை நகராட்சியில் 24 வார்டுகளிலும் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் பகிர்மான குழாய் Pumping Main ஆகியவற்றில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்புகளை சரி செய்யவும், வால்வு தொட்டியில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் 2022-2023ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

செங்கோட்டை நகராட்சியின் 24 வார்டுகளிலும் உள்ள சிறுமின் விசை மோட்டார் பம்புகள் (Sintex Tank) கம்பிரஷர் மோட்டார், திறந்தவெளி கிணறு மோட்டார்கள் மற்றும் MCC மையத்தில் அமைந்துள்ள மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை நீக்கி இயக்க 2022-2023ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ,5,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது, மேற்படி பணியினை செய்யவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்** :

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 06 :</u>**

செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளை கிணற்று Hand Pumps 113 எண்ணங்கள் 2022-2023ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்** :

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 07 :</u>**

செங்கோட்டை நகராட்சி அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் அம்ருட் 2.0 ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தவும் அதற்கான திட்டக் கருத்துருவினை தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் தயார் செய்து அனுப்பி வைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி ஆய்வுக் கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்து முழு வடிவில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குதற்குரிய திட்டக் கருத்துருவினை தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் தயார் செய்தல் அவசியமாகிறது. பணியின் அவசர அவசியம் கருதி 5,5,2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் மேலும் மேற்படி Consultancy-க்கான கட்டணத்தினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | Imayam Creatirs<br>Tiruvarur Main Road, Puthur, | திட்ட மதிப்பில் 2.5% மற்றும் GST |

| | | |
|---|---|---|
| | Nagapattinam | |
| 2. | ECT Infra Solutions Pvt Ltd<br>Gandhi Nagar, Adayar<br>Chennai | திட்ட மதிப்பில் 2.25% மற்றும் GST |
| 3. | SSG Engineering<br>Kasthuri bai Nagar, Chennai | திட்ட மதிப்பில் 2% மற்றும் GST |

அலுவலக குறிப்பு

அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 SSG Engineering சென்னை நிறுவன விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி Consultancyக்கான கட்டணத்தினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 08 :**

செங்கோட்டை நகராட்சியால் முன்சீப் நீதிமன்றங்களில் எதிர்கொள்ளப்படும் அனைத்து வழக்குகளிலும் இந்நகராட்சி சார்பில் திரு.கிருஷ்ணமூர்த்தி, செங்கோட்டை வழக்கறிஞர் தற்போது வரை ஆஜராகி மன்ற வழக்கறிஞராக பணி மேற்கொண்டு வருகிறார். தற்பொழுது திரு.நல்லையா, கடையநல்லூர் வழக்கறிஞரை இந்நகராட்சி சார்பில் நீதிமன்றங்களில் ஆஜராவதற்கு மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்து உத்தரவு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை தொடர்ந்து நகராட்சி சார்பாக ஆஜராக மன்றம் தீர்மானம் வழங்கப்பட்டது. எனவே திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நம் நகராட்சி வழக்கறிஞராக தொடர்ந்து வழக்காட மன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப் பொருள் 09 :**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15—ஆவது மத்திய நிதி ஆணையம், 2022—2023—ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள்

விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**சொத்துவரி:**</u>

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது

அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் செங்கோட்டை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.22 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 2.24 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 3.64 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 1.32 |
| | **மொத்தம்** | **7.42** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், செங்கோட்டை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் 10–05–2022ம் தேதிக்குள் சமர்ப்பிக்கக்கோரி 13–04–2022ம் தேதி தினமணி நாளிதழ் மற்றும் அலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. பொது மக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணைகளும் பெறப்படவில்லை என்பதாலும், சொத்து வரி பொது சீராய்வு மேற்கொண்டு 14 வருடங்கள் கடந்த நிலையில், நகராட்சியின் அன்றாட பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளுக்கான நிதிச் செலவுகளை எதிர்கொள்ளுவதற்கும், நிலுவையிலுள்ள கடன்களை திருப்பி செலுத்துவதற்கும், நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்துவது மிக அத்தியாவசியமாகிறது. எனவே அரசாணை எண் 52 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30–03–2022ன் படி செங்கோட்டை நகராட்சியில் 01–04–2022 முதல் சொத்து வரி / காலியிடவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உயர்வு செய்ய தீர்மானித்த காரணிகளை ஊர்ஜிதம் செய்யப்படுகிறது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு :

1. பொது வரிச் சீராய்வு தொடர்பான மண்டல மதிப்பு உறுதி செய்யலாம்.
2. வரிச்சீராய்வினை நடைமுறைப்படுத்தலாம்
3. மேற்படி சொத்து வரி, காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கும் அறிவிக்கையினை தென்காசி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

செங்கோட்டை நகராட்சி பகுதி வாழ் மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியவர்கள் என்பதால் வரி சீராய்வினை மறு பரீசிலனை செய்ய வேண்டும் என பெரும்பாலான நகர்மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதால் வரி சீராய்வு நடவடிக்கையினை மேற்கொள்வதினை இந்நகராட்சியில் செயல்படுத்த வேண்டாம் என முடிவு செய்து அரசினை தாழ்மையுடன் கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 10 :**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022ன் கீழ் செங்கோட்டை நகராட்சி முத்துசாமி பூங்காவினை மேம்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 73 நாள் 13.05.2022. ன்படி ரூ.159.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

## தீர்மானம் :

பதிவு செய்யப்பட்டது.

**மன்றப் பொருள் 11 :**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நெகிழி பயன்பாட்டை தவிர்த்து 'மீண்டும் மஞ்சள் பை ' திட்டத்திற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் SBM திட்ட பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள், வணிக வர்த்த அமைப்புகள் மூலமாகவும் பொது மக்கள் கூடும் இடங்கள் திருவியா நடைபெறும் இடங்கள் திருமண மண்டபங்கள் பேருந்து நிலையம், இல்லமை விசேஷ விழாக்கள் நடைபெறும் இடங்கள் வணிக வளாகங்கள் திரையரங்குகள், பள்ளிகள் கல்லூரிகள் வணிக நிறுவனங்கள் சிறு சிறு கடைகள் ஹோட்டல்கள் மற்றும் வீடுகளுக்கும் மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்திடவும் இலவசமாக மஞ்சள்பை வழங்கி நெகிழி பயன்பாட்டை தவிர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நெகிழி இல்லா செங்கோட்டை நகராட்சியை உருவாக்க முன்னெனுக்கும் முயற்சிக்கும் இந்நகராட்சி மூலம் **2000** எண்ணம் மஞ்சள் பைகள் தமிழக முதல்வரின் 'மீண்டும் மஞ்சள் பை ' திட்டத்தினை சிறப்பாக முன்னெடுத்து நடத்திட மஞ்சள் பைகள் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**52,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் :

**மன்ற தீர்மானம்** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 12 :**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நெகிழி பயன்பாட்டை தவிர்த்து 'மீண்டும் மஞ்சள் பை ' திட்டத்திற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் கலர் நோட்டீஸ்கள், கலர் ஸ்டிக்கர்கள்

அச்சடித்து இந்நகர பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்திட ஏதுவாக கலர் ஸ்டிக்கர் மற்றும் கலர் நோட்டீஸ்கள் கொடுத்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வணிக நிறுவனங்கள், பஸ் நிலையம் திருமண மண்டபங்கள் (திருமண நிகழ்வுகள்) கோவில் திருவிழாக்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் வீட்டு விசேஷ நிகழ்வுகள் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு நோட்டீஸ் வழக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே கலர் ஸ்டிக்கர்கள், கலர் நோட்டீஸ்கள் அச்சடிக்கும் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் :

**அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 13 :</u>**

திரு.V.முத்துப்பாண்டி 19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம் :

1) டீச்சர் வேலாயுதம் பிள்ளை தெருவில் நடுவே கழிவுநீர் கால்வாய் திறந்தவெளியில் இருப்பதால் அதனை மூடி தர வேண்டி

2) பண்டாரம் தெருவில் இயங்கி கொண்டியிருக்கும் சின்டெக்ஸ் தற்போது மின்மோட்டார் ரிப்பேர் காரணமாக இயங்கவில்லை. அதனை சரி செய்ய வேண்டி

3) இன்சூரன்ஸ் ஆஸ்பத்திரி தெரு அருகே அடிபம்பு ஒன்று கழிவுநீர் கலந்து வருவதால் அதனை சுத்தம் செய்ய வேண்டி.

4) கே.சி ரோடு பாளையத்தார் ரைஸ்மில் அருகே குடிநீர் குழாய் உடைந்து செல்வதால் அதனை சரி செய்ய வேண்டி.

5) கே.சி ரோடு மந்திரம் தெரு கழிவு நீர் கால்வாய் பாலம் தனிந்து இருப்பதால் மழை நேரங்களில் கழிவு நீர் சரியாக செல்லாமல் அருகில் உள்ள வீடுகளில் உள்ளே கழிவு நீர் செல்கிறது. ஆதலால் தனிந்து இருக்கும் பாலத்தை சீரமைக்க வேண்டி.

6) தேவர் தெருவில் உள்ள சின்டெக்ஸ் செயல்படவில்லை. அதனை சரி செய்ய வேண்டி.

7) ராமசாமி தெருவில் உள்ள சின்டெக்ஸ் செயல்படவில்லை. அதனை சரி செய்ய வேண்டி.

8) வம்பளந்தான் முக்கு அரசமரத்து அருகில் உள்ள சின்டெக்ஸ் செயல்படவில்லை அதனை சரி செய்ய வேண்டி

9) தேவர் தெருவில் உள்ள மின் போஸ்ட்டில் புதிய மின் விளக்கு அமைத்து தர வேண்டி.

10) கேசி ரோட்டில் இருந்து பூதத்தான் கோவில் வரை செல்லும் 18வது வார்டு, 19வது வார்டு ஆகிய இருவார்டுகளையும் இணைக்கும் ரோடு சீரமைத்து தர வேண்டி

11) கேசி ரோடு டிரான்ஸ்பார்மர் அருகில் புல் செடி கொடிகள் நிறைந்து காணப்படுவதால் அதனை சுத்தம் செய்து தர வேண்டி

12) முத்துசாமி பூங்காவில் அமைந்து இருக்கும் கட்டண கழிப்பிடம் சுத்தம் மற்றும் சுகாதாரம் இல்லை. வேலை நேரங்களில் இயங்குவதில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். அதிகமாக ரூ.5/- கட்டணம் வசூலிக்கப்படுகிறது நடவடிக்கை எடுக்க வேண்டி.

அலுவலகக் குறிப்பு :

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்800/2021/ஆ1 நாள் **01-11-2021**ன் படி பொது நிதியில் மேற்கொள்ள இருக்கும் அனைத்துப் பணிகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

**திரு.V.முத்துபாண்டி முன் மொழிந்த தீர்மானத்தில் மன்றம் அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

__மன்றப் பொருள் 14 :__

**திருமதி.எஸ்.டி.சுடர்ஒளி 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம் :**

தெற்கு ரத வீதியில் 1வது தெருவில் சுமார் 132 வீடுகளுக்கு கழிவுநீர் கலந்த குடிநீர் சுமார் இரண்டு வருடமாக வந்து கொண்டு இருக்கிறது. இதை பல முறை சுகாதார பிரச்சனையாக எடுத்துக் கூறியும் நிரந்தர தீர்வு இல்லை. ஆதலால் மக்களின் சுகாதார நலன் கருதி அந்த கழிவு நீர் ஒடையை சரி செய்தும், புது குடிநீர் குழாயும் அமைத்து சாலையை சீரமைக்கும் பொருட்டு சிமிண்ட் கல் பதித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி

அலுவலகக் குறிப்பு :

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்800/2021/ஆ1 நாள் **01-11-2021**ன் படி பொது நிதியில் மேற்கொள்ள இருக்கும் அனைத்துப் பணிகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

**திருமதி.சுடர்ஒளி நகர்மன்ற உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**